தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.05.2013 A.M**

---

## வேளாண் பொருள்களை பதப்படுத்த இலவச பயிற்சி

சென்னை கொடுவள்ளியில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் வேளாண் பொருள்கள் பதப்படுத்துதல் குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கல்லூரி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: வேளாண் பொருள்களைப் பதப்படுத்துல், சந்தைப்படுத்துதல் குறித்த இலவச பயிற்சி வரும் ஜூலை 1-ஆம் தேதி தொடங்கவுள்ளது.

பயிற்சியில் படித்த, படிக்காத இளைஞர்கள், விவசாயிகள், சுய உதவிக் குழுவினர் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கலாம். வயது வரம்பு, கல்வித் தகுதி இல்லை. பயிற்சியின்போது, மதிய உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

வரும் ஜூன் 25-ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படும். மேலும் விவரங்களுக்கு 9444155312 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## பாரம்பரிய விளை பொருள்கள் விழிப்புணர்வுப் பேரணி

சிதம்பரத்தில் தமிழக அரசு வேளாண்துறை சார்பில் பள்ளி மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற பாரம்பரிய விவசாயப் பொருள்கள் குறித்த விழிப்புணர்வுப் பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

பேரணி, சிதம்பரம் கீழரத வீதியில் உள்ள வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டது. பேரணியில் பள்ளி மாணவ, மாணவிகள், விதைப் பண்ணை விவசாயிகள் மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். பேரணியை உதவி ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் முன்னிலை வகித்தார்.

பள்ளி நிர்வாகி வீனஸ் எஸ்.குமார், தலைமை ஆசிரியர் ஜி.மகேஷ்சுந்தர் ஆகியோர் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பேரணி பாரம்பரிய விவசாயப் பொருள்களான இளநீர், பருத்தி ஆடைகள், சீயக்காய், சிறிய தானியப் பயறுகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் படங்கள் அடங்கிய பதாகைகளுடன் முக்கிய வீதிகள் வழியாக மீண்டும் பள்ளி வளாகத்தை வந்தடைந்தது.

## இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க வலியுறுத்தல்

புதுச்சேரி மாநில விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மை முறையை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாஜக வலியுறுத்தியுள்ளது.

புதுச்சேரி மாநில பாஜக விவசாய அணி சார்பில் விவசாயி அணி செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாநில விவசாய அணித் தலைவர் ஜி.பத்மநாபன் தலைமை வகித்தார்.

பொதுச் செயலர் பி.சிவன்ஒளி முன்னிலை வகித்தார்.

பாஜக மாநிலத் தலைவர் எம்.விஸ்வேஸ்வரன், பொதுச்செயலர் ஆர்.வி.சுவாமிநாதன், விவசாய அணி பொறுப்பாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் பேசினர்.

துணைத் தலைவர்கள் பி.சிவனேசன், ஏ.எஸ்.இளங்கோவன், செயலர்கள் ஜி.ராஜமூர்த்தி, விஎம்ஜி.ஆறுமுகம், எஸ்.சிவநெறி, பொருளர் வி.பச்சையாபிள்ளை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏரி, குளங்களில் நீரை முழுவதும் வெளியேற்றி மீன்பிடிக்கும் முறையைத் தடை செய்ய வேண்டும். நிலத்தடி நீரைப் பாதுக்காக்க, வலைவீசி மீன்பிடிக்க குத்தகைதாரருக்கு அறிவுறுத்த வேண்டும்.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்குக் கால்நடை வழங்கும் திட்டத்தில், பெண்களைவிட அரசியல் கட்சியினர் அதிகமானோர் பயனடைந்துள்ளதால், கடந்த 7 ஆண்டுகளில் நடந்த முறைகேடு குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உபகரணங்கள் குறைந்த வாடகையில் வழங்க வேண்டும். வாஜபேயி அரசு கொண்டு வந்த கிசான் கார்டு திட்டத்தை, விவசாயிகள் பயனடையும் வகையில் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ரசாயன உரங்களால் பாதிக்கப்பட்ட மண்வளத்தை மீட்டெடுக்க, இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்துவதோடு, தேவையான இடுபொருள்களையும் மானிய விலையில் வழங்க வேண்டும்.

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் விவசாயிகளுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய காவிரி நீரைப் பெற்றுத் தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிற்சாலையின் கழிவுகள் நீர்நிலைகளில் நேரடியாகக் கலந்து நீர்வளம் மாசுபடுவதைத் தடுக்க வேண்டும்.

ரியல் எஸ்டேட் தொழில் மூலம் புதுவையில் விவசாய நிலங்கள் முற்றிலுமாக அழியும் நிலை உள்ளது.

இதைத் தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கண்ணீர் வர வைக்கும் சின்ன வெங்காயம்

ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை சின்ன வெங்காயம் கிலோ ரூ. 70-க்கு விற்றதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

பருவமழை பொய்த்து விட்டதால், மார்க்கெட்டில் காய்கறிகளின் வரத்து குறைந்து விட்டது.

தாராபுரம் மற்றும் துறையூரில் இருந்து சின்ன வெங்காயம் மட்டும் விற்பனைக்கு வந்தது. குறைந்த அளவே சின்ன வெங்காயம் வந்ததால்,வியாபாரிகள் அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

ஞாயிற்றுக்கிழமை தாராபுரம் பகுதி வெங்காயம் கிலோ ரூ.70}க்கு விற்றது.

அதேபோல, துறையூர் வெங்காயம் கிலோ ரூ. 50 முதல் 65 வரை விற்பனை செய்யப்பட்டது.

மழை பெய்தால் விலை இன்னும் அதிகரிக்கும் என வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

### வறட்சியைத் தாங்கி வளரும் கொத்தவரைவி. ரவிச்சந்திரன்

எளிய முறையில் பணம் தரும் பயிர்களை விளைவித்தால் விவசாயத்தை லாபகரமான தொழிலாக மேற்கொள்ள முடியும். இந்த வகையில் குறைந்த அளவு தண்ணீர், உரம் மற்றும் பெருமளவு பூச்சி தாக்குதல் இல்லாத பயிரான கொத்தவரையைப் பயிரிட்டால் கணிசமான லாபம் பெறலாம் என

சிவகங்கை மாவட்டம், கீழக்கண்டனி பகுதியில் 15 ஏக்கரில் கொத்தவரை பயிரிட்டுள்ள விவசாயி கண்ணா சுப்ரமணியன் தெரிவித்தார்.

இது குறித்து "தினமணி'க்கு அவர் அளித்த பேட்டி:

சிவகங்கை பகுதியில் வறட்சி காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டு வருகிறது. இந் நிலையில், வறட்சியைத் தாங்கி, பூச்சி தாக்குதலால் ஏற்படும் குறைந்த பாதிப்பு, பெருமளவிலான உரம் செலவு குறைவு, சிவகங்கையின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவகையில் கொத்தவரை பயிர் உள்ளது.

வட இந்தியாவில் உள்ள தனியார் நிறுவனம் இப்பயிர்களுக்கான விதையை தருகிறது. விதைக்காக நாம் பணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. ஒரு ஏக்கரில் கொத்தவரை பயிரிட்டு அறுவடை செய்ய உரம், கூலி உள்பட சுமார் ரூ.7 ஆயிரம் செலவு ஆகும்.

பயிரிட்ட நாளில் இருந்து 120 நாள்களுக்குள் அறுவடை செய்திடலாம். செடி வதங்கும் நிலை ஏற்படும்போது தண்ணீர் விட்டால் போதுமானது. ஒரு ஏக்கருக்கு சுமார் 500 முதல் 600 கிலோ வரை கொத்தவரை கிடைக்கும்.

இந்த அவரையை விதை தந்த நிறுவனமே நமக்கு அளித்த விதையின் எடை அளவைக் கழித்துக் கொண்டு மீதமுள்ள கொத்தவரையை கிலோ ஒன்றுக்கு ரூ.60 என்ற வகையில் திரும்ப எடுத்துக் கொள்கிறது.

வறட்சியான சமயங்களில் இதுபோன்ற பயிரை விவசாயிகள் பயிரிட்டு லாபம் ஈட்டலாம் என்றார் விவசாயி கண்ணா சுப்ரமணியன்.

## சூறைக்காற்றுடன் மழை: வாழைகள் பெரும் சேதம்

திருப்புவனம் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலையிலிருந்து இரவு வரை சூறைக்காற்றுடன் பெய்த பலத்த மழையால் பல ஏக்கரில் வாழை மரங்கள் சாய்ந்தன. மின் கம்பங்களும் சாய்ந்ததால் சனிக்கிழமை பிற்பகல் வரை மின்விநியோகம் தடைபட்டது.

மானாமதுரை, திருப்புவனம் ஆகிய பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த சூறைக்காற்றுடன் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. பலத்த மழையால் வெப்பம் தணிந்தது.

மானாமதுரை பகுதியில் ஒரு மணி நேரமும், திருப்புவனம் பகுதியில் 2 மணி நேரத்துக்கும் மேலும் மழை நீடித்தது. மழையால் திருப்புவனம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல இடங்களில் மரங்கள் சாலையில் சாய்ந்தன.

மின் கம்பங்களும் சாய்ந்ததால் திருப்புவனத்தை சுற்றியுள்ள பல இடங்களில் மின்தடை ஏற்பட்டு அப்பகுதிகள் இருளில் மூழ்கின. திருப்புவனம் அருகேயுள்ள மேலவெள்ளூர், மணலூர் ஆகிய கிராமங்களில் சுமார் 50-க்கும் மேற்பட்ட ஏக்கரில் நடவு செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் சூறைக்காற்றுக்கு வேரோடு சாய்ந்தன.

இதனால் கடன் வாங்கி வாழை விவசாயம் செய்திருந்த விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். அரசு தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மின்கம்பங்கள் சரி செய்யப்பட்டு கிராமங்களில் சனிக்கிழமை மதியத்துக்கு மேல் மின் விநியோகம் செய்யப்பட்டது.

சேதம் குறித்து கணக்கெடுக்க

ஆட்சியர் உத்தரவு

திருப்புவனம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பெய்த சூறைக்காற்றுடன் கூடிய மழைக்கு சேதமடைந்த வாழை மரங்கள் குறித்து கணக்கெடுக்க மாவட்ட ஆட்சியர் ராஜாராமன் உத்தரவிட்டுள்ளார்.

மேலவெள்ளூர், மணலூர் ஆகிய கிராமங்களில் சுமார் 50 ஏக்கரில் வாழை மரங்கள் சாய்ந்து விழுந்தன. இதனால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகள் தங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தினர். இதையடுத்து மாவட்ட ஆட்சியர் ராஜாராமன் திருப்புவனம் பகுதியில் திடீரென பெய்த மழை மற்றும சூறைக்காற்றுக்கு சேதமடைந்த வாழை மரங்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்துமாறு வருவாய்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## பெருந்துறை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.43 லட்சத்துக்கு கொப்பரை விற்பனை

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.43 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையாகியுள்ளது.

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 2,131 மூட்டைகளில் 1 லட்சத்து 6 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று ரூ.41 முதல் ரூ.42.80-க்கும் ஏலம் போனது. இரண்டாம் தர கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று ரூ.33.60 முதல் ரூ.40.65 வரை ஏலம்போனது. மொத்தம் கொப்பரை ரூ.43 லட்சத்துக்கு விற்பனையானது.

பெருந்துறை வாரச்சந்தைக்கு விவசாயிகள் சுமார் 2 லட்சம் தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். முதல் தரம் தேங்காய் ரூ.5 முதல் ரூ.6-க்கும், 2-ம் தரம் தேங்காய் ரூ.4 முதல் ரூ.5-க்கும், 3-ம் தரம் தேங்காய் ரூ.3 முதல் ரூ.4-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு தேங்காய் விற்பனையானது.

### ஆம்பூரில் கன மழை

ஆம்பூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடி மின்னலுடன் கன மழை பெய்தது.

ஆம்பூரில் பிற்பகல் வரை கடுமையான வெயில் காணப்பட்டது. அனல் காற்றும் வீசியது. இந்நிலையில், மாலை சுமார் 3.30 மணிக்கு மேல் திடீரென கருமேகங்கள் சூழ்ந்து லேசான தூரலுடன் மழை தொடங்கியது. பின்னர் 2 மணி நேரம் கனமழை பெய்தது.

மழையின் காரணமாக, ஆம்பூர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அருகே சாலையோர மரக்கிளை முறிந்து விழுந்ததில் மின்கம்பி அறுந்தது. அதனால் சில மணி நேரம் நேரத்துக்கும் மேலாக ஆம்பூரின் பல்வேறு பகுதிகளில் மின்தடை ஏற்பட்டது. இரவு சுமார் 7.45 மணிக்கு மின்தடை சீர்செய்யப்பட்டது.

அதேபோல, வேலூர், காட்பாடியிலும் ஞாயிற்றுக்கிழமை மாலை லேசான மழை பெய்தது. சிறிது நேரமே நீடித்த இந்த மழை, வெயிலில் வாடும் வேலூர் மக்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியது.

### ஆரணி பகுதியில் பலத்த மழை

ஆரணி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த மழை

பெய்தது.

ஆரணி மற்றும் சுற்றியுள்ளப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தொடங்கிய மழை 7 மணி வரை நீடித்தது. இடி, மின்னலுடன் பலத்த காற்றும் வீசியது. கடும் வெயிலால் அவதிப்பட்டு வந்த ஆரணி பகுதி மக்களை இந்த மழை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## இலவச கயிறு தயாரிப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

தஞ்சாவூரில் ஜூன் 1 முதல் தொடங்கவுள்ள இலவச கயிறு தயாரிப்பு பயிற்சியில் சேர நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மத்திய அரசின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் பிள்ளையார்பட்டியில் இயங்கி வரும் கயிறு வாரியத்தின் மண்டல விரிவாக்க மையத்தில் இலவச கயிறு தயாரிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஜூன் 1ஆம் தேதி தொடங்கி 6 மாதங்கள் நடைபெறவுள்ள இந்தக் கயிறு ஆர்டிசன் பயிற்சி வகுப்பில் சேர 18 வயது முதல் 45 வயதுக்கு உள்பட்ட இரு பாலரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதில் சேர எழுத, படிக்கத் தெரிந்திருந்தால் போதும். பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி வசதியுடன் மாதம் ரூ.750 உதவித்தொகை வழங்கப்படும்.

பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்ப படிவங்களை ஜ்ஜ்ஜ்.ஸ்ரீர்ண்ழ்க்ஷர்ஹழ்க்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை வளர்ச்சி அலுவலர், மண்டல விரிவாக்க மையம், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர் - 613403 என்ற முகவரிக்கு ஜூன் 17ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்று ஆட்சியர் டி.ஜகந்நாதன் தெரிவித்துள்ளார்.

## தென்பெண்ணை ஆற்றில் வெள்ளம்

கெலவரப்பள்ளி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 18 கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்த அணை முழு கொள்ளளவான 41 அடி நீர்மட்டத்தை ஏற்கெனவே எட்டியுள்ளது.

தற்போது அணைக்கு வினாடிக்கு 400 கன அடி நீர்வரத்து உள்ளது.

அந்த நீர் இரு கால்வாய்களில் திறந்து விடப்படுகிறது.

இதனால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கெலவரப்பள்ளி, தொரப்பள்ளி, அக்ரஹாரம், கொல்லப்பள்ளி, கோபசந்திரம், பார்த்தகோட்டா, போடூர், ஆலியாளம் உள்ளிட்ட 18 கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், கிராமங்களை விட்டு வெளியே வரமுடியாமல் முடங்கியுள்ளனர்.

மேலும், சிலர் கிராமங்களுக்கு வெள்ள நீரில் நீந்திச் செல்லும் நிலை உள்ளது.

தமிழகத்தில் கத்திரி வெயில் சுட்டெரிக்கும் நிலையில், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சூறாவளிக் காற்றால் பல இடங்களில் சாய்ந்து விழுந்த மரங்கள் வாழைகள் பெரும் அளவில் சேதம்: புள்ளம்பாடியில் 54 மி.மீ. மழை

திருச்சி மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சனிக்கிழமை சூறாவளி காற்றுடன் பெய்த மழையின் காரணமாக பல இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்தன. மேலும் வாழைகளும் பெருமளவில் சேதமடைந்துள்ளதாகவிவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையிலான நிலவரப்படி மாவட்டத்தில் புள்ளம்பாடியில் அதிகபட்சமாக 54 மி.மீ. மழையும், குறைந்தபட்சமாக கொப்பம்பட்டியில் 2.1 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளன.

அக்னி நட்சத்திரம் முடிய உள்ள நிலையில் பகலில் வெயிலின் தாக்கம் அதிகம் இருந்து வரும் நிலையில், வெள்ளிக்கிழமை இரவு காற்றுடன் மழை பெய்து அக்னியின் தாக்கத்தை குறைத்தது.

இந்த நிலையில் சனிக்கிழமை இரவும் திருச்சி மாநகரிலும் புறநகரிலும் இடி-மின்னல், பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் தேங்கி நின்றது. பாலக்கரை, மேலப்புதூர், தென்னூர், உறையூர், வயலூர் சாலை போன்ற பகுதிகளில் மழைநீர் சாலைகளில் தேங்கியிருந்தன.

சாய்ந்து விழுந்த மரங்கள்: வயலூர் சாலையில் சில இடங்களில் தென்னை மரங்கள் சாய்ந்து மின் கம்பிகள் மீது விழுந்தன. இதில் மின்வயர்கள் துண்டிக்கப்பட்டு மின்தடை ஏற்பட்டது. தகவலறிந்த மின்வாரிய அதிகாரிகள் மரங்களை அகற்றும் பணியை மேற்கொண்டனர்.

திருச்சி கே.கே.நகர் பெரியார் மணியம்மை பள்ளி வளாகத்தில் மழையின் காரணமாக மரம் விழுந்ததில் 2 கார்களும், எல்ஐசி காலனி பகுதியில் மின் மாற்றியும் சேதமடைந்தன.

சிங்காரத்தோப்பு, ஜங்ஷன் பகுதிகளில்வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள் சரிந்து விழுந்தன. கலையரங்கம் திரையரங்கம், ரயில் நிலையம் அருகே சாலையில் மரங்கள் சாய்ந்தன. மேலும், பாரதியார் சாலையில் ஜங்ஷன் அருகே பேருந்து நிழற்குடை காற்றில்சேதமடைந்தன.

2 மாடுகள் சாவு : பொன்மலை சந்தை பகுதியில் மழையி6ன் காரணமாக தொட்டிக்குள் விழுந்திருந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அத்தொட்டியில் தண்ணீர் குடிக்கச் சென்ற 2 மாடுகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தன.

திருச்சி மாவட்டத்தில் வாழைகள் அதிகம் பயிரிடப்பட்டுள்ள தொட்டியம், முசிறி, லால்குடி, அந்தநல்லூர், வயலூர், சோமரசம்பேட்டை போன்ற பகுதிகளில் காற்றின் காரணமாக வாழைகள் சேதமடைந்தன. இச்சேதம் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழையளவு : மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி மழையளவு விவரம் ( அளவு மி.மீட்டரில்):

புள்ளம்பாடி - 54 மி.மீ, பொன்மலை -36, திருச்சி டவுன் -35, திருச்சி ஜங்ஷன்- 32,

லால்குடி -28, பொண்ணனியாறு- 26.26, திருச்சி விமான நிலையம் -18, கல்லக்குடி -17.2, சமயபுரம் -20, துறையூர் -9.4, துவாக்குடி -9, பொண்ணனியாறு அணை-7.4, முசிறி, நந்தியாற்றுத் தலைப்பு -7, தா.பேட்டை -6, சிறுகுடி -5, நவலூர் குட்டப்பட்டு -4.3, கோவில்பட்டி -4.2, வாய்த்தலை அணைக்கட்டு -3.5, கொப்பம்பட்டி -2.1.

## சின்ன வெங்காயத்தை சேமித்து விற்றால் அதிக லாபம்

அறுவடை செய்யும் சின்ன வெங்காயத்தை ஜூன் மாதம் வரை சேமித்து வைத்து விற்றால் லாபம் பெறலாம் என்றார் வேளாண் பல்கலைக்கழக உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய தோட்டக்கலை வாரிய கணக்கீட்டின்படி, தமிழகத்தில் 41,570 ஹெக்டேரில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. உற்பத்தி 6,67,740 டன். கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ. 10 முதல் ரூ. 11 வரை இருந்தது.

ஆனால் இந்த ஆண்டு கிலோவுக்கு ரூ. 30 முதல் ரூ. 35 வரையில் உள்ளது. வர்த்தக கணக்குகளின் படி விதைப்பு மற்றும் போதிய மழை இல்லாததால் சின்ன வெங்காயம் வரத்து குறைந்துள்ளது. தை, மாசி பட்டத்தில் விதைத்த சின்ன வெங்காயம் தற்போது கோவை, திண்டுக்கல், தேனி, பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்து சந்தைக்கு வருகின்றன. இதில் 60 சதவீதத்திற்கு மேல் நல்ல தரமான நாற்றுக் காயாக உள்ளது.

நாற்றுக் காயை சேமிக்கும் தன்மை நடவுக்காயின் சேமிப்பு தன்மையை விடக் குறைவா கும். தமிழ்நாட்டில் பெரும் பாலும் கர்நாடக வெங்காயமே முக்கிய பங்காற்றுகிறது. இங்கிருந்து சின்ன வெங்காய வரத்து தற்போது முடிவடைந்துள்ளது. கர் நாடக விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தமிழ் நாட்டில் இருந்து விதை வெங்காயத்தை மே மாத நடவுக்காக கொள்முதல் செய்து வருகின்றனர். ஆகஸ்ட் மாதத்தில் இருந்து கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு சின்னவெங்காயம் வரத்து தொடங்கும்.

ஆயினும் தற்போது விலை குறைவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்த முடிவுகளின் படி சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோ விற்கு ரூ.32 முதல் ரூ.35 ஆகவும், முதல் தர வெங்காயம் கிலோவிற்கு ரூ.40க்கு மேல் இருக்க வாய்ப்புகள் உள்ளன.

சிறந்த தரமான சின்ன வெங்காயம் வட்ட வடிவம் மற்றும் இளஞ்சிவப்பு முதல் சிவப்பு நிறத்துடனும் இருக்க வேண்டும். சிறந்த தரத்திற்கு கோ5 ரகத்தை பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர். மே, ஜூன் மாதங்களில் விலை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே அறுவடை செய்யும் சின்ன வெங்காயத்தை ஜூன் மாதம் வரை சேமித்து வைத்து விற்றால் லாபம் ஈட்டலாம் என்றார் அவர்.

## புதுகை அருகே பலத்த சூறைக்காற்று: 200 ஏக்கர் பரப்பில் வாழைப்பயிர் சேதம்

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே சனிக்கிழமை மாலையில் பலத்த சூறைக்காற்று வீசியதால் அப்பகுதியில் சுமார் 200 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் வேரோடு சாய்ந்தன. சேதத்தைப்பார்த்த அதிர்ச்சியில் மயங்கி விழுந்த ஒரு விவசாயி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று மாலையில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. திரண்டிருந்த மேகத்துக்கு பலத்த காற்று மட்டும் வீசாமல் இருந்திருந்தால் கூடுதல் மழை பொழிவு இருந்திருக்கும் என்ற சூழ்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பலத்த சூறைக்காற்றுடன் பரவலான மழை பெய்தது. அதில் புதுக்கோட்டை அருகே மூக்கம்பட்டி, கம்மங்காடு, மாத்தூர், மேலவிடுதி, மாங்கோட்டை உள்பட பல்வேறு கிராமங்களில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டிருந்த வாழை மரங்கள் வேரோடு சாய்ந்தன. போதிய மழையின்றி கடும் வறட்சியும், மின்தடையும் ஒருசேர சிரமத்தை தந்த போதிலும், அதை சமாளித்து ஆழ்குழாய் கிணறுகளின் உதவியுடன், கூட்டுறவு மற்றும் தனியார் வங்கிகளில் மூலம் கடனுதவி பெற்று இப்பகுதி விவசாயிகள் வாழை சாகுபடி மேற்கொண்டனர்.

இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சனிöக்கிழமை மாலையில் பலத்த காற்றுடன் தொடங்கிய திடீர் மழையால் ஒட்டு மொத்த விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர். எனினும், மழையுடன் எதிர்பாராமல் வீசிய சூறைக்காற்று வாழைப்பயிரில் ஏற்படுத்திய சேதம் விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மூக்கம்பட்டி, கம்மங்காடு, மாத்தூர், மேலவிடுதி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 250 ஏக்கப் பரப்பளவில் பயிரிடப்பட்டுர் அடுத்த சில நாள்களில் பலன் கிடைக்கும் நிலையில் இருந்த மரங்கள், சூறைக்காற்றால் சுமார் (200 ஏக்கர்) 75 சதவிகித வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விவசாயிகளுக்கு பல லட்சம் வருவாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சூழ்நிலையில், ஞாயிற்றுக்கிழமை மூக்கம்பட்டியைச் சேர்ந்த விவசாயி கணேசன் தனது வயலுக்குச்சென்று வாழைப்பயிர்கள் சேதத்தை பார்த்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியால் மயங்கி விழுந்த அவர் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனவே, மாவட்ட நிர்வாகம் தற்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை கணக்கிட்டு உரிய நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

## 1,20,536 விவசாயிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1,20,536 விவசாயிகளுக்கு ரூ.50.66 கோடி பெறுவதற்காக புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1 லட்சத்து 58 ஆயிரத்து 975 விவசாயிகளுக்கு, ரூ. 60 கோடியே 79 லட்சத்து 26 ஆயிரத்து 590 நிவாரணத்தொகை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில், மாவட்டத்தில் உள்ள 52 தொடக்க வேளாண்ண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நிவாரணத்தொகை வழங்கும் பணி ஏப். 2ம் தேதி நடைபெற்று வருகிறது. கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பாதிக்கபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புகைப்படத்துடன் கூடிய வறட்சி நிவாரண அடையாள சீட்டு வழங்கப்பட்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.

வறட்சியால் பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கிராம நிர்வாக அலுவலர்களிடம் புகைப்படத்துடன் கூடிய உரிய அனுமதிச்சீட்டை பெற்று சம்மந்தப்பட்ட முதன்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நிவாரணத்தொகை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிவாரணத்தொகை பெற, கூட்டுறவு கடன் சங்கங்களில் கணினிச் சிட்டா நகல் அளிக்க தேவையில்லை. பயிர் விளைச்சல் பாதிப்பு வறட்சி நிவாரணம் வழங்கும் பணிகளில், இதுவரை 1 லட்சத்து 20 ஆயிரத்து 536 விவசாயிகளுக்கு (83.34 சதவீத விவசாயிகள்) பயிர் விளைச்சல் பாதிப்பு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ. 50,66,49,237 பெறுவதற்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 94,252 விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு சென்று, வறட்சி நிவாணரத் தொகையாக ரூ. 42 கோடியே 15 லட்சத்து 50 ஆயிரத்து 834 பெற்றுள்ளனர். மீதமுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றார் அவர்.

### மகாதானபுரத்தில் விவசாயிகளுக்கு ரூ. 10 லட்சம் நிவாரண உதவி

அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்துக்கு உள்பட்ட மகாதானபுரம் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 10 லட்சத்துக்கு நிவாரண உதவிகள் சனிக்கிழமை வழங்கப்பட்டன.

கன்னியாகுமரி ஊராட்சி மகாதானபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் கே.டி. பச்சைமால் பங்கேற்று நெற்பயிர் விவசாயிகள் 81 பேருக்கு ரூ. 1,94,800, தென்னை விவசாயிகள் 624 பேருக்கு ரூ. 7,80,520, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து பல்வேறு உதவிகளை செய்து வருகிறார் முதல்வர் ஜெயலலிதா. அதிமுக ஆட்சிக்கு வந்த 2 ஆண்டுகளில் தேர்தல் காலக்கட்டத்தில் அறிவித்த

அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றி தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றுள்ளார் முதல்வர் என்றார் அவர்.

மாவட்ட அண்ணா தொழிற்சங்கச் செயலர் காரவிளை எம். செல்வன், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத் தலைவி இ. சாந்தி, அரசு வழக்குரைஞர் டி. பாலகிருஷ்ணன், கன்னியாகுமரி ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர் கே. இசக்கிமுத்து, துணைத் தலைவர் ஆ. கண்ணன், செயலர் எஸ். நடராஜன், சாமிதோப்பு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர் என். பார்த்தசாரதி, ஆரோக்கியபுரம் மீனவர் கூட்டுறவு வங்கித் தலைவர் கே. லீன், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர் சுப்பையா, பி. முரளி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர், லீபுரம் ஊராட்சியில் அரசு சார்பில் வழங்கப்பட்ட 120 விலையில்லா ஆடுகளுக்கு மருத்துவ சிகிச்சையை அமைச்சர் தொடக்கிவைத்தார்.

லீபுரம் ஊராட்சித் தலைவர் கே. முத்துசுவாமி, துணைத் தலைவர் ஆர். சந்திரகலா, வார்டு உறுப்பினர் ஜெயகுமார் பங்கேற்றனர். மண்டல கால்நடைத் துறை இணை இயக்குநர் முகம்மது ஷாபி, உதவி இயக்குநர்கள் ஜான்சாமுவேல், ஆறுமுகப்பெருமாள், உதவி மருத்துவர் முருகேசன் ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

### முள்ளங்கனாவிளையில் கால்நடை மருத்துவ முகாம்

முள்ளங்கனாவிளை ஊராட்சியில் தமிழக அரசின் விலையில்லா ஆடு திட்டத்தில் வழங்கப்பட்ட ஆடுகளுக்கான கால்நடை மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

முள்ளங்கனாவிளை ஊராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற முகாமுக்கு கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ததேயூ பிரேம்குமார் தலைமை வகித்து முகாமைத் தொடக்கிவைத்தார். வார்டு உறுப்பினர் சிலுவைராஜ் முன்னிலை வகித்தார். கிள்ளியூர் ஒன்றிய கால்நடை மருத்துவர் சஜயன், ஆட்டுக்குட்டிகளைப் பரிசோதித்து சிகிச்சையளித்தார். குடற்புழு நீக்கம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

முகாமில் வார்டு உறுப்பினர் மலையப்பன், கால்நடை மருத்துவ உதவியாளர் மந்திரி,ஜஸ்டஸ், பென்னட் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பயனாளிகளுக்காக ஓராண்டுவரை மாதந்தோறும் கடைசி சனிக்கிழமை இந்த முகாம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## கருப்பு விவசாயிகளின் நலன்காக்க ரங்கராஜன் அறிக்கையை அமல்படுத்தவேண்டும்: கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

கரும்பு விவசாயிகளின் நலன்காக்க சி.ரங்கராஜன் அறிக்கையை மத்திய அரசு அமல்படுத்த வேண்டும் என்று கர்நாடக கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை கர்நாடக கரும்பு விவசாயிகள் சங்கத்தலைவர் குருபூரு சாந்தகுமார், செய்தியாளர்களிடம் கூறியது: பெங்களூரில் சனிக்கிழமை நடைபெற்ற தேசிய கரும்பு விவசாயிகள் மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கரும்பு விவசாயிகள் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டிய கடமை மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் கரும்பு விவசாயிகளின் நலன்காக்க 10 கோரிக்கைகளை முன்வைத்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். கரும்பு விவசாயிகளின் நலன்கருதி பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி.ரங்கராஜன் மற்றும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆகியோர் ஏற்கெனவே அளித்துள்ள பரிந்துரைகளை மத்திய அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும். நாடெங்கும் ஒரே மாதிரியான கரும்பு ஆதரவுவிலையை நிர்ணயிக்க வேண்டும். மேலும் கரும்பு அறுவடை மற்றும் போக்குவரத்து செலவுகளை சர்க்கரை ஆலைகளிடம் ஒப்படைக்க வேண்டும். கரும்புவிவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கு இடையே சட்டப்படியான ஒப்பந்தம் செய்து கொள்ள வகைசெய்ய வேண்டும்.

இதுதவிர, நாடெங்கும் கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய கொள்முதல் தொகையை உடனடியாக வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த காலத்தில், அதிகவிளைச்சல் தரக்கூடிய கரும்புவகையை அறிவியல் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். இதற்காக, கரும்பு மேம்பாட்டு நிதியத்தை உருவாக்கி, ஆராய்ச்சிப்பணிகளுக்கு அளிப்பதோடு, நீர்ப்பாசன பம்ப்செட்களில் சூரியஒளி தொழில்நுட்பத்தை பயன்படுத்த 100 சதவிகித மானியம் வழங்க அரசு முன்வர வேண்டும். எல்லா சர்க்கரை ஆலையிலும் மின் உற்பத்தி நிலையம் அமைக்க உத்தரவிட வேண்டும். இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தை விவசாயிகளுக்கு மலிவுவிலையில் வழங்க வேண்டும். சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும் வெல்லப்பாகு மற்றும் கரும்பு சக்கையை விற்க அனுமதிக்க வேண்டும். தேசிய வேலை உறுதி திட்டத்தை விவசாயத்துறைக்கும் விரிவாக்க வேண்டும் என்றார். பேட்டியின்போது தேசிய கரும்பு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சத்தியநாமசிங் பெஹரு, பொதுச்செயலாளர் பி.செங்கல்ரெட்டி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உரிமமின்றி அமோனியம் நைட்ரேட் விற்றால் கடும் நடவடிக்கை

தில்லியில் உரிமம் இல்லாமல் அமோனியம் நைட்ரேட் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தில்லி காவல் துறை தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 31-ஆம் தேதிக்குள் உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அதன் பிறகு உரிமமின்றி விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காவல் துறை அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காவல் துறையின் உத்தரவுப்படி பள்ளிகள், மருத்துவமனைகளில் ஐந்து கிலோவுக்கு மேல் அமோனியம் நைட்ரேட் வைத்திருக்கக்கூடாது.

ஐந்து கிலோ அளவுக்குள் அமோனியம் நைட்ரேட் வைத்திருக்கும் தகவலையும் உள்ளூர் காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமோனியம் நைட்ரேட்டைக் கொண்டு தீவிரவாதிகள் வெடிபொருள் தயாரிப்பது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, 1908-ஆம் ஆண்டின் வெடிபொருள் சட்டத்தில் அமோனியம் நைட்ரேட் சிறப்பு வெடிபொருள் என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. 2008-இல் அந்த அறிவிப்பு வெளியானது.

அதை விற்பதற்கு காவல் துறையிடம் உரிமம் பெற வேண்டும் என்று அமோனியம் நைட்ரேட் டீலர்களுக்கு தில்லி காவல் துறை அறிவுறுத்தியுள்ளது.

## திருக்கோவிலூரில் சூறைக்காற்றுடன் பலத்த மழை

திருக்கோவிலூரில் ஞாயிற்றுக்கிழமை மாலை சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது.

தமிழகம் முழுவதும் அக்னி வெயில் வாட்டி வதைத்து வருகிறது. மேலும் கடந்த சில தினங்களாக வட மாவட்டங்களில் கடுமையான வெப்பக்காற்று வீசி வந்தது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், திருக்கோவிலூர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் திடீரென பலத்த காற்றுடன் மழை கொட்டியது.

இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் மழையுடன் சேர்ந்து பலத்த சூறைக்காற்றும் வீசியது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பல இடங்களில் வீடுகளின் மேற்கூரை மற்றும் ஓடுகள் சேதமடைந்தன. பலத்த மழை காரணமாக பஸ் நிலையம் உள்ளிட்ட தாழ்வான பகுதிகள் மற்றும் சாலைகளில் மழைநீர் தேங்கியது.

திடீர் மழை காரணமாக திருக்கோவிலூர், அரகண்டநல்லூர் உள்ளிட்ட இடங்களில் மின்தடை ஏற்பட்டதால் பெரும்பாலான இடங்கள் இருளில் மூழ்கின.

இன்றைய வேளாண் செய்திகள்

27.05.2013 A.M

## நெல் கொள்முதல் முறைகேடுகள் தடுக்க தொழிலாளர் வலியுறுத்தல்

தஞ்சாவூர்: தஞ்சையில் ஏ.ஐ.டி.யு.சி., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்க, 30வது ஆண்டு பேரவை கூட்டம், சங்க அலுவலக அரங்கில் நடந்தது. இதில் ஏ.ஐ.டி.யு.சி., தஞ்சை மாவட்டத்தலைவர் தில்லைவனம் கொடியேற்றி வைத்தார். துணைத்தலைவர் சந்தானம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் மூர்த்தி பேரவையை துவக்கி வைத்து பேசினார்.

மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் வரவேற்றார். மாநில பொதுச்செயலாளர் சந்திரகுமார் வேலை அறிக்கை வாசித்தார். வரவு-செலவு அறிக்கையை பொருளாளர் கோவிந்தராஜும், தீர்மானத்தை இணை பொதுச்செயலாளர் குணசேகரனும் முன்மொழிந்து வாசித்தனர். துணைத்தலைவர்கள் அய்யாசாமி, தனபால், செல்வராஜ், சிவானந்தம், செயலாளர்கள் கோதண்டபாணி, புண்ணீஸ்வரன், சுப்பிரமணியம் உட்பட பலர் பங்கேற்றனர்.

கொள்முதல் நிலையங்களில் உளுந்து, பயிறு உள்ளிட்ட பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும். கிராமம், நகரத்தில் அமுதம் பல்பொருள் அங்காடிகளை வாணிப கழகம் மூலம் செயல்படுத்த வேண்டும். பாட்டில் கேன்களில் அடைத்து விற்கப்படும் குடிநீர் விற்பனையையும், அம்மா உணவகங்களையும் வாணிப கழகம் ஏற்று நடத்த வேண்டும்.

நெல்கொள்முதலில் ஊழல் முறைகேடு தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்முதல் பணியாளருக்கு மாதம், பத்தாயிரம் ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டும். சுமை தொழிலாளருக்கு எடைக்கூலி மூட்டை ஒன்றுக்கு, பத்து ரூபாயும், ஏற்றுக்கூலி டன் ஒன்றுக்கு, 45 ரூபாயும் மற்ற கூலி விகிதங்களை இரட்டிப்பாக்கியும் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## 3,500 விவசாயிக்கு விதைநெல் மாநில திருவிழாவில் வழங்கல்

திருத்துறைப்பூண்டி: ஆதிரெங்கத்தில் நடந்த மாநில அளவிலான நெல் திருவிழாவில், 3,500 விவசாயிகளுக்கு பாரம்பரிய விதைநெல் பரிசாக வழங்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் இயற்கை விவசாய

ஆராய்ச்சி பண்ணையில், இரண்டாம் நாள் மாநில நெல் திருவிழா, இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமையில் நடந்தது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நாகை மண்டல முதன்மை மேலாளர் சிவசாமி, தஞ்சை பாரத ஸ்டேட் வங்கி முதன்மை மேலாளர் முருகவேல் பூபதி, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிசங்கர், கிரியேட் சேர்மன் துரைசிங்கம், இயற்கை மருத்துவர் சித்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

"கிரியேட்' இயக்க மேலாண்மை அறங்காவலர் பொன்னம்பலம் வரவேற்றார். பாரம்பரிய நெல் பரிமாற்றம் குறித்து, நமது நெல்லை காப்போம் இயக்க ஜெயராமன் விளக்கம் அளித்தார். தொடர்ந்து, பாரம்பரிய நெல் குறித்த நூலை, அரசின் வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டு, கருத்துரை வழங்கினார்.

கருத்தரங்கில், 3,500 விவசாயிகளுக்கு, தலா இரண்டு கிலோ வீதம், 63 வகையான, பாரம்பரிய நெல் விதைகளை கலெக்டர் நடராஜன் வழங்கி பேசினார். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சடையாண்டி, நமது நெல்லை காப்போம் தேசிய ஒருங்கிணைப்பாளர் உஷா குமாரி, வேளாண் இடுபொருள் வர்த்தக ஈரோடு சங்கத்தலைவர் வெங்கடேஷ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் பாரம்பரிய நெல் சாகுபடி குறித்து கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் மயில்வாகனன் (விவசாயம்), மாவட்ட வழங்கல் அலுவலர் மனோகரன், திருத்துறைப்பூண்டி தாசில்தார் ராஜகோபால் ஆகியோர் விளக்கினர்.

திருவிழா நிறைவு விழாவில் பாரம்பரிய நெல் காப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ., எத்திராஜா, ஆதிரெங்கம் பஞ்., தலைவர் அப்துல் முனாப், டாக்டர் ராஜா, திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ., உலகநாதன், பஞ்., யூனியன் தலைவர் வேதநாயகி, நகராட்சி தலைவர் உமாமகேஸ்வரி உள்பட பலர் பங்கேற்றனர். கிரியேட் இயக்க அறங்காவலர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

மேற்கண்ட இரண்டு நாள் மாநில நெல் திருவிழாவில், தமிழகம், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, ஒடிஷா ஆகிய மாநிலங்களிலிருந்து, மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## மண் பரிசோதனைக்கு பிறகு விவசாயம் செய்வது அதிகரிப்பு

பெரியகுளம்:பெரியகுளம் பகுதியில், விவசாயிகளிடையே மண்பரிசோதனை செய்து விவசாயம் செய்யும் பழக்கம் அதிகரித்துள்ளது. பெரியகுளம் பகுதியில் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி நடக்கிறது. பொதுவாக, பயிர் விளைச்சலுக்கு மண் வளமானதாக இருக்க வேண்டும். அத்துடன் நீர் வளமும் அவசியம். மண்ணின் கார, அமிலநிலையை பொறுத்துதான்

மண்ணின் சத்துக்கள் பயிருக்கு கிடைக்கும் நிலை இருக்கிறது. மண்ணில் 16 வகையான முக்கிய சத்துக்கள் உள்ளன. பெரியகுளம் பகுதியில், மண்ணின் பாகுபாடு, நன்செய் நிலங்களில் செம்மண்ணுடன் மணல் கலந்த வளமான மண் பாங்குடைய மண்ணாகவும், மானாவாரி நிலங்களில் மணற்பாங்குடைய செம்மண் நிலங்களாகவும் உள்ளது.மண்ணில் சத்துக்கள் இருப்பதை அறியவும், பயிருக்கு உரமிட தேவையின் அளவு குறித்தும் கணக்கிடுவதற்கு மண்பரிசோதனை செய்வது அவசியம். நிலங்களில் பயிரிடாத காலங்களிலும், உரமிடாத காலங்களிலும் தான், மண் மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும். நிலத்தில் நான்கு முனைகள் மற்றும் மையப்பகுதிகள் உள்பட ஐந்து இடங்களில், மண் எடுக்க வேண்டும். மண்பரிசோதனை நிலையங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின் மண்ணின் தன்மைக்கேற்ப, பயிர் ரகத்தேர்வு செய்யப்படுகிறது. பெரியகுளம் பகுதியில், விவசாயிகள் மண் மாதிரிகள் செய்த பிறகே பயிர் செய்கின்றனர். தேனியில் உள்ள மண்மாதிரி ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது

## உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவங்க அழைப்பு

விருதுநகர்:வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் சார்பில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை விவசாயிகள் தொடங்க, வேளாண் துணை இயக்குனர் கே. முத்து முனியாண்டி அழைப்பு விடுத்துள்ளார்.அவர் கூறியிருப்பதாவது:அதிக விளைச்சலில் வெற்றி பெறும் விவசாயிகள் கூட சந்தைபடுத்தும் போது, உரிய விலையின்றி நஷ்டமடைவது இன்றைய நிலையாகி விட்டது. இதை மாற்ற தனிப்பட்ட விவசாயியாக இல்லாமல் ஒரு குழுவாக அல்லது நிறுவனமாக செயல்பட்டால் உரிய விலை பெற முடியும். மதிப்பு அதிகப்படுத்தி விற்க முடியும், உயர் தொழில் நுட்பங்களை உரிய நேரத்தில் பெறவும், வங்கி கடன் மற்றும் இதர சேவைகளை பெற முடியும். இந்த நிறுவனத்தில் அனைத்து நில உரிமையாளர்கள் உறுப்பினராக சேரலாம். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை வித்திட்ட நுட்பத்தினை சிறு விவசாயிகளின் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் (எஸ்.எப்.ஏ.சி) செயல்படுத்த உள்ளது. இது மாதிரி நிறுவனங்கள் அமைப்பதால் உயர் விளைச்சல் மட்டுமன்றி, சந்தையில் நல்ல விலையை நிர்ணயிக்கும் வலிமையை, விவசாயிகளின் நிறுவனங்களுக்கு உண்டாக்கலாம். விவசாயிகளை தொழில் முனைவோராக மாற்றவும் இத்திட்டம் உதவியாக இருக்கும். விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திட, சந்தை வாய்ப்புக்களை அறிந்திட தமிழக அரசு திருச்சியில் வேளாண் சந்தை தகவல் மற்றும் வணிக மேம்பாட்டு மையத்தை அமைத்துள்ளது, என அவர் தெரிவித்துள்ளார்

## பருத்தி சாகுபடி பரப்பளவு பலமடங்கு.... குறைவு போதிய விலையின்மை, நோய்தாக்குதலால்...

வத்திராயிருப்பு:பருத்திக்கு போதிய விலை இல்லாததாலும், அடிக்கடி ஏற்படும் நோய் தாக்குதலாலும் ,நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் பருத்தி சாகுபடியை தவிர்த்து வருகின்றனர். மாவட்டத்தில் பருத்தி சாகுபடி பலமடங்கு குறைந்து வருகிறது.மாவட்டத்தில் நெல்சாகுபடி செய்யும் விவசாயிகள் கோடை காலத்தில் நீர்பற்றாக்குறை ஏற்படும் போது, நெல்லுக்கு மாற்றாக பருத்தி சாகுபடி செய்வது வழக்கம். பருத்திக்கு மிகக்குறைந்த நீர் கிடைத்தாலும் போதுமானது. மண்ணில் இருக்கும் குறைந்த ஈரப்பதத்தைக்கூட பயன்படுத்தி நன்கு வளர்ந்து பயன்கொடுக்கும் தன்மை கொண்டது. விவசாயிகள் பருத்தியை விரும்பி பயிரிடுவார்கள். கடந்த 10 வருடமாக பருத்தி விலை குவிண்டாலுக்கு 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே விவசாயிகளுக்கு கிடைக்கிறது. உரம் விலை, உழவு நடவு செலவுகள் 10 மடங்கு உயர்ந்துள்ளது. மகசூல் மூலம் கிடைக்கும் தொகை விவசாயிகளின், பராமரிப்பு செலவுக்கு கூட கட்டுபடியாகவில்லை. இந்நிலையில் அடிக்கடி பருத்தி செடியில் ஏற்படும் மாவுப்பூச்சி நோய் தாக்குதல், விவசாயிகளை நஷ்டத்தில் தள்ளிவிடுகிறது. இவ்வளவு பிரச்னைக்கு மத்தியில் பருத்தி சாகுபடி செய்தாலும், அவற்றை தினமும் சேகரிக்க தொழிலாளர் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. பல விவசாயிகள் பருத்தி சாகுபடியை தவிர்த்து விட்டனர். இதன்காரணமாக மாவட்டத்தில் பருத்தி சாகுபடி பலமடங்கு குறைந்து விட்டது. தற்போதைய கடும்வறட்சி காரணமாக வழக்கத்தை விட கூடுதலாக மகசூல் குறைந்துள்ளது. வத்திராயிருப்பு பகுதியில் கோடைசீசனில் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பருத்தி சாகுபடி செய்யப்படும்.இது படிப்படியாக குறைந்து இந்த ஆண்டு வெறும் 500 ஏக்கருக்கும் குறைவாகவேபயிரிடப்பட்டுள்ளது. பருத்தி சாகுபடி குறைந்ததால், பருத்தி வியாபாரம் குறைந்து வியாபாரிகள் வருத்தத்தில் உள்ளனர்

## அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால், முதல் போக நெல் சாகுபடிக்கு முன்கூட்டியே அணை திறந்து விடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் அணை பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கர்நாடகா மாநிலம் நந்தி ஹில்ஸ் மலையில் தென்பெண்ணை ஆறு உற்பத்தியாகி தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்கள் வழியாக சென்று வங்க கடலில் கலக்கிறது.

கடந்த சில நாட்களாக கர்நாடகா மாநிலத்தில் தென்பெண்ணை ஆற்று நீர் பிடிப்பு பகுதியில்

தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் தமிழகத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.
நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு, 570 கன அடிநீர் வந்து கொண்டிருந்தது.
அணையின் மொத்த கொள்ளவு, 44 அடியில், 42 அடிநீர் நிரம்பியதால் அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு, 470 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.
இதன் காரணமாக, கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.
கே.ஆர்.பி., அணையின் மொத்த கொள்ளவு, 52 அடியாகும். வழக்கமாக ஜூன் மாத வாக்கில் கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில், முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படும்.
இதன் மூலம், 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.
கடந்த ஆண்டு கர்நாடகா மாநிலத்தில் போதிய மழை பெய்யாத காரணத்தால் நீர் வரத்து குறைந்ததால், கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில், முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடவில்லை. இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டது.
இந்நிலையில், இந்த ஆண்டு கர்நாடகா மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழையால் கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரபடி அணைக்கு விநாடிக்கு, 289 கன அடிநீர் வந்தது. அணையின் மொத்த நீர் மட்டமான, 52 அடியில் தற்போது, 35 அடிநீர் நிரம்பியுள்ளது.
தென்மேற்கு பருவமழை தொடங்கவுள்ளநிலையில் கர்நாடகா மாநிலத்திலும், தமிழகத்தில் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியிலும் மழை பெய்யும் என்பதால் கே.ஆர்.பி., அணை வேகமாக நிரம்பும் வாய்ப்புள்ளது.
இதனால் இந்த ஆண்டு கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் முதல் போக நெல் சாகுபடிக்கு முன் கூட்டியே தண்ணீர் திறந்து விட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால், அணை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மானாவாரியில் எள் சாகுபடி துவக்கம் அதிக மகசூல் பெற அறிவுரை

கிருஷ்ணகிரி: கடந்த சில தினங்களாக பெய்து வரும் கோடை மழையை தொடர்ந்து, எள் நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு அடுத்தப்படியாக சிறுதானிய பயிர்களும், எண்ணெய் வித்து பயிர்களும் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.
மாவட்டத்தில் குறிப்பாக மேட்டுப்பாங்கான நிலம் அதிகம் உள்ள மத்தூர், போச்சம்பள்ளி,

வேப்பனப்பள்ளி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பில் மானாவாரியாக எள் சாகுபடி செய்யப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக கோடை மழை பெய்து வருவதால், மானாவரி எள் சாகுபடிக்காக விவசாயிகள் நிலத்தை சீர் செய்து எள் விதைப்பை துவங்கியுள்ளனர்.

எள் சாகுபடி குறித்து வேளாண் துறையினர் கூறியது:

எள் சாகுபடியில் விவசாயிகள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை முழுமையாக கடைப்பிடித்தால் அதிக மகசூல் பெறலாம். தற்போது எள்ளில் ஏக்கருக்கு சராசரியாக, 100 லிருந்து, 120 கிலோ மகசூல் தான் பெறப்படுகிறது. வேளாண் துறை பரிந்துரைக்கப்படும் முக்கிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றினால் ஏக்கருக்கு, 200 கிலோவில் இருந்து, 225 கிலோ வரை மகசூல் எளிதாக பெறலாம்.

ஏக்கருக்கு, 2 கிலோ வீதம் டி.எம்.வி.,3, வி.ஆர்.ஐ.,1, மற்றும் கோ.,1 ஆகிய ரகங்களில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயினை தடுக்க, ஒரு கிலோ விதையுடன், 2கிராம் கார்பென்டசிம் அல்லது, 4 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும்.

விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன்பு விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு இயற்கையாகவே தழைச்சத்து கிடைக்க, ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும், ஒரு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின்பு விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு அடியுரமாக ,5 டன் தொழு உரம் இட்டு அதனுடன் தழை, மணி சாம்பல் சத்து தரவல்ல, 20 கிலோ யூரியா, 31 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும், 9 கிலோ மூரியேட்ஆப் பொட்டாஸ் உரத்தினை அடியுரமாக இடவேண்டும்.

விதைத்த, 15வது நாள் செடிக்கு, செடி, 15 செமீ இடைவெளி இருக்கும்படியும், 30வது நாளில் செடிக்கு, செடி, 30 செமீ இடைவெளி உள்ளவாறு வைத்து மற்ற செடிகளை அகற்றி விட வேண்டும்.

செடிகளை கலைத்து விடும்போது வயலில் போதுமான ஈரம் இருப்பது நல்லது. எள் பயிரில், பயிர் கலைத்தல், ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும். எனவே, தற்போது பெய்துள்ள கோடை மழையை பயன்படுத்தி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானாவாரியில் எள் சாகுபடி செய்து அனைத்து தொழில் நுட்பங்களை

கடைபிடித்து அதிக மகசூல் பெற்று பயன் பெறலாம். மேலும் மானியங்கள் குறித்த விபரங்களை அருகில் உள்ள வேளாண்மை, உதவி வேளாண்மை அலுவலங்களில் சென்று தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

### ஜூன் 15ல் மாங்கனி கண்காட்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் வரும் ஜூன், 15ம் தேதி, 21வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி தொடங்குகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 50 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் மா வகைகள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மட்டுமன்றி வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள, 50க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் மாங்கூழ் ஐரோப்பா மற்றும் சவுதி அரேபியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
இதன் மூலம் ஆண்டுக்கு, 100 கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய செலவாணியாக ஈட்டப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிக அளவு மா சாகுபடி செய்வதால் ஆண்டு தோறும், அகில இந்திய மாங்கனி கண்காட்சி இங்கு நடத்தப்படுகிறது.மாங்கனி கண்காட்சியில், மாவட்டத்தில் விளையும் மாம்பழங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு, சிறந்த ரகத்தை விளைவித்த விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். 21வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி ஜூன், 15ம் தேதி கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் துவங்குகிறது.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்குள் நாள் கூட்டம் வரும், 30ம் தேதி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.
கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:
கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 30ம் தேதி காலை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் ராஜேஷ் தலைமை வகிக்கிறார். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து கொள்ளலாம்.

### வறட்சி நிவாரண தொகை வழங்கல்

காரிமங்கலம்: காரிமங்கலம் யூனியன், கெரகோடஅள்ளி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.
சங்க தலைவர் சம்பத் முன்னிலை வகித்தார். எம்.எல்.ஏ., அன்பழகன், 306 பேருக்கு, 6 லட்சத்து,

70 ஆயிரத்து, 393 ரூபாய் வறட்சி நிவாரண தொகையை வழங்கினார். முன்னாள் தலைவர் காவேரி, பழனி, பால் கூட்டுறவு சங்க தலைவர் முருகன், ஒன்றிய மாணவரணி செயலாளர் ரவிசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர். சங்க செயலாளர் சோமு நன்றி கூறினார்.
* பேகாரஅள்ளி வங்கியில் நடந்த நிகழ்ச்சியில், 295 பேருக்கு, 8 லட்சத்து, 38 ஆயிரத்து, 541 ரூபாயை வங்கி தலைவர் பொன்னுவேல் வழங்கினார். பஞ்சாயத்து தலைவர் பரசுராமன், முன்னாள் தலைவர்கள் சந்திரன், சம்பத், துணைத்தலைவர் பட்டு மற்றும் இயக்குனர் உட்பட பலர் கலந்து கொண்டனர். சங்க செயலாளர் ரவி நன்றி கூறினார்.
* செம்மாண்ட குப்பம் வங்கியில் நடந்த விழாவில், யூனியன் சேர்மன் நிர்மலா விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகையை வழங்கினார். ஒன்றிய செயலாளர் கோவிந்தசாமி, வங்கி தலைவர் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மழையின்றி கரும்பு உற்பத்தி குறைவு நாட்டு சர்க்கரை ஆலைகள் மூடல்

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் கரும்பு உற்பத்தி குறைவு காரணமாக, நூற்றுக்கணக்கான நாட்டு சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டுள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் மற்றும் அமராவதி பாசனப்பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது.
பதிவு செய்யப்பட்ட கரும்பை தவிர, மற்ற கரும்புகள் வெல்லம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. கோபி, அத்தாணி, கவுந்தபாடி, அந்தியூர், ஆப்பக்கூடல், கூகலூர், ஒத்தகுதிரை ஆகிய பகுதிகளில் உருண்டை, நாட்டு சர்க்கரை மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. கவுந்தபாடி மற்றும் சித்தோடு வெல்ல மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது.
பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சி, பருவமழை பொய்த்ததால், கரும்பு உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. சில இடங்களில் மட்டுமே கரும்பு விளைச்சல் உள்ளது.
கரும்பு விளைச்சல் இல்லாததால் நாட்டு சர்க்கரை உற்பத்தி குறைவாக காணப்படுகிறது.
உற்பத்தி குறைவால், 30 கிலோ உருண்டை வெல்லம், 1,100 முதல், 1,200 ரூபாய் வரையும், அச்சு வெல்லம், 950 முதல், 1,050 ரூபாய் வரை, 60 கிலோ நாட்டு சர்க்கரை, 1,550 முதல், 2,000 ரூபாய் வரை விற்பனையாகியது.
கடும் வறட்சியால் கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட கரும்பு பயிர்கள் கருகி காணப்படுகிறது.
வெல்லம் உற்பத்திக்கு தேவையான கரும்பு இல்லாததால், கோபி சுற்று வட்டாரத்தில் நூற்றுக்கணக்கான நாட்டு சர்க்கரை ஆலைகள் மூடப்பட்டுள்ளது.
வெல்ல உற்பத்தியாளர்கள் கூறியதாவது:
ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருண்டை வெல்லம், அச்சு வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை சித்தோடு, கவுந்தபாடி மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது.

இம்மார்க்கெட்டில் இருந்து தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளாக சரியான மழை இன்றி நாட்டு சர்க்கரை உற்பத்தி பாதியாக குறைந்துள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் ஏராளமான கரும்பு உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டது. நாட்டு சர்க்கரை உற்பத்தி குறைவால் உருண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லத்தின் விலை உயரும், என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

## கொட்டியது மழை; குளிர்ந்தது சத்தி

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த திடீர் மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது.
சத்தியமங்கலம் பகுதியில் கடந்த ஆறு மாதமாக மழை பெய்யாமல் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் வனப்பகுதி வறண்டு காணப்பட்டது. வனப்பகுதிக்குள் உள்ள குளம், குட்டைகளில் தண்ணீர் வற்றியது. வனப்பகுதிக்குள் வசித்த யானை, மான், காட்டெருமை போன்ற வனவிலங்குகள் தண்ணீர் மற்றும் உணவு தேடி வனகிராம பகுதிக்கு படையெடுக்க தொடங்கியது. தங்கள் விவசாய கிணற்றில் தண்ணீர் வற்றியதால் வயலோடு பயிர்கள் அழிவதை பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடித்தனர். தங்களிடம் இருக்கும் கால்நடைகளை தண்ணீர் மற்றும் உணவு பஞ்சத்தால் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் சம்பவமும் நடந்தது.
இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக மூன்று முறைக்கு மேல், ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் மழை கொட்டியது. ஆனால் சத்தியமங்லம் மற்றும் சுற்றுப்பகுதியில் மட்டும் மழையில்லாததால் கடும் வெப்பக்காற்று வீசியது. இதனால் பொதுமக்கள் வெளியே செல்லமுடியாத அளவுக்கு வெப்பத்தால் பாதிக்கப்பட்டனர்.
கடந்த புதன்கிழமை இரவு லேசாக மழை பெய்தது. இதையடுத்து நேற்று முன்தினம் இரவு சத்தியமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதியில் பலத்த மழை கொட்டியது. இதனால் வறண்டுபோன வயல்களில் மழை தண்ணீர் தேங்கி நிற்க தொடங்கியது. இந்த மழையினால் கடும் வெப்பத்தின் தாக்குதலில் இருந்து பொதுமக்கள் விடுபட்டுள்ளனர். தொடர்ந்து சில நாட்களுக்கு இதுபோன்ற மழை நீடித்தால் வன விலங்குகளுக்கும், நிலத்தடி நீராதாரத்துக்கும் சிறிதளவு தண்ணீர் கிடைக்கும்.

## வண்டி மாடுகளுக்கு சோளத்தட்டு பற்றாக்குறை

ஈரோடு: ஈரோடு நகர் பகுதியில், வண்டி மாடுகளுக்கு தேவைப்படும் சோளத்தட்டு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், புறநகர் பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டு, கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகத்தில், போதிய மழையின்றி, ஆறு, குளம், குட்டை, கிணறு, ஆழ்துளை கிணறு ஆகிய நீராதாரங்களில், பெரும்பாலானவை தண்ணீரின்றி வறண்டு கிடக்கின்றன.
அதனால், விவசாய பாதிப்பு மட்டுமின்றி, பொதுமக்களுக்கும் குடிநீர் கிடைக்காமல் பல்வேறு அவதிக்குள்ளாகி வருகின்றனர்.
ஈரோடு மாவட்டத்தில், காவிரி, நொய்யல், அமராவதி, பவானிசாகர், கீழ்பவானி, காலிங்கராயன், வரட்டுப்பள்ளம், குண்டேரிபள்ளம் ஆகிய நீராதாரங்களை கொண்டே விவசாயம் நடந்து வருகிறது.
இருந்தும், ஒட்டுமொத்தமாக இந்தாண்டு மழையின்றி, விவசாயமும் இல்லை, கால்நடைகளுக்கு தீவனமும் இல்லை.
நகர் பகுதிக்குள், தொழில் ரீதியாக பயன்படுத்தப்படும் வண்டி மாடுகளுக்கு, புறநகர்பகுதிகளில் இருந்து சோளத்தட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் வரை, வெண்டிப்பாளையம், சுண்ணாம்பு ஓடை, மாணிக்கம்பாளையம், வாய்க்கால்கரை ஆகிய பகுதிகளில் இருந்து, ஒரு கட்டு தலா, ஏழு ரூபாய் என விற்கப்பட்டது.
இப்பகுதியிலும், சோளத்தட்டின் அறுவடை முடிந்துவிட்டதால், சங்ககிரி ஆர்.எஸ்., நசியனூர், வெப்படை ஆகிய பகுதிகளில் இருந்து சோளத்தட்டுகள் பெறப்பட்டு, நகர்பகுதியில் உள்ள வண்டி மாடுகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது.
புறநகர் பகுதியில் இருந்து பெறப்படும் சோளத்தட்டுகள், ஒரு கட்டு தலா, எட்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
இதுகுறித்து, சோளத்தட்டு விற்பனையாளர் செல்வராஜ் கூறியதாவது:
ஈரோடு நகர் பகுதியில் மட்டும், பத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட வண்டி மாடுகள் உள்ளன.
மழையின்றி, சோளத்தட்டின் விலை அதிகரித்துள்ளது.
புறநகர் பகுதியில் இருந்து ஆட்டோவில், சோளத்தட்டு எடுத்து வரப்படுவதால், அதிக வாடகை கொடுக்க வேண்டியுள்ளது. அதனால், கடந்த ஒரு வாரமாக சோளத்தட்டின் விலை கட்டு ஒன்றுக்கு தலா, எட்டு ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது, என்றார்.

## வெங்காயம் வரலாறு காணாத உயர்வு சத்தியில் கிலோ ரூ.60க்கு விற்பனை

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் சிறிய வெங்காயம் கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனையாவதால் பெண்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.
சத்தியமங்கலத்தில் தக்காளி கடந்த மாதம், 15 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் இதே தக்காளி கிலோ, 33 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால் பெண்கள் மற்றும் ஹோட்டல் கடைகளில் தக்காளி சட்னி போன்ற பயன்பாட்டை தவிர்த்து, மாறாக வெங்காய சட்னி, பீட்ரூட் சட்னி போன்றவவைகளுக்கு மாறினர்.
இந்நிலையில் சிறிய வெங்காயம் கடந்த வாரம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று

கிலோ, 60 ரூபாய்க்கு விற்பனையானது. சின்ன வெங்காயத்தில் பொடியாக இருப்பது கிலோ, 50க்கும் விற்பனையானது.

இதுபற்றி, சத்தியமங்கலம் தினசரி மார்கெட் வியாபாரி கணேசன் கூறியதாவது: தற்போது கல்யாண முகூர்த்தம் அதிகமாக இருப்பதால், காய்கறிகள் விலை அதிகரித்துள்ளது. வறட்சியால் பெரும்பாலான இடங்களில் ஒட்டு மொத்த காய்கறி விளைச்சலும் குறைந்து காணப்படுகிறது. மழை பெய்ததால், அதன்பின், இரு மாதங்களுக்குப்பின் காய்கறி விலை குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

இந்த விலையேற்றத்தால் ஹோட்டல்களில் சாப்பாட்டின் விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### காய்கறி விலை உயர்வு நகரி வார சந்தை "வெறிச்'

நகரி: நகரி சந்தையில் காய்கறி வரத்து குறைந்து விட்டதால், சந்தை வெறிச்சோடி காணப்பட்டது.சித்தூர் மாவட்டம், நகரியில், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் காய்கறி சந்தை கூடுகிறது. நகரியில் தினசரி காய்கறி மார்க்கெட் இல்லாததால், நகரியை சுற்றியுள்ள 50க்கும் மேற்பட்ட கிராமத்தினர் வெள்ளிக்கிழமை சந்தையில், தவறாமல் வீட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கி செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது .கடந்த, நான்கு வாரங்களாக கோடை வெயில் காரணமாக, சந்தையில் கடை விரித்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளும், வெளியூர்களிலிருந்து வருவதை தவிர்த்துள்ளனர். தொடர் மின் வெட்டு, வெயில் மற்றும் வறட்சி காரணமாக இப்பகுதியில் கத்திரி, கொத்தவரங்காய், பீர்க்கங்காய், முள்ளங்கி, வாழைக்காய் போன்ற காய்கறிகளை, பயிர் செய்யும் விவசாயிகள் விளைச்சலை தவிர்த்து விட்டனர்.கடந்த மார்ச் மாத இறுதியில், கிலோ நான்கு ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி தற்போது, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அவரைக்காய் கிலோ, 45 ரூபாய்க்கு விற்கிறது.இதேபோல், பிற காய்கறிகளும் விலை அதிகரித்துள்ளது. மே, ஜூன் துவங்கினால், வெயில் காலம் துவங்கி விடுகிறது. திருமணம், சுப நிகழ்ச்சிகளும் அதிகரிப்பதால், காய்கறிகளின் விலையும் அதிகரித்து விடுகிறது. இதனால், நகரி வார சந்தை வெள்ளிக்கிழமை மாலை, 4:00 மணி வரை வெறிச்சோடி காணப்பட்டது.

### கடம்பத்தூர் உழவர் பெருவிழாவில் 14,935 விவசாயிகள் பயன்

கடம்பத்தூர்:கடம்பத்தூர் ஒன்றியத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில், 14,935 விவசாயிகள் பயன் அடைந்தனர்.கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள, 53 வருவாய் கிராமங்களில், வேளாண்மைத்துறை சார்பில், ஏப்., 14 முதல், மே, 20 வரை உழவர் பெருவிழா நடந்தது. இதன் நிறைவு விழா, கடம்பத்தூர் ஒன்றியம் கொட்டையூர் கிராமத்தில் நடந்தது.விழாவிற்கு கடம்பத்தூர்

ஒன்றிய குழு தலைவர், தட்சிணா மூர்த்தி தலைமை தாங்கினார். கொட்டையூர் ஊராட்சி மன்ற தலைவர் சதாசிவம் முன்னிலை வகித்தார். பாரம்பரிய உணவுவிழாவில், வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கலாதேவி, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கருப்பசாமி, வேளாண் விதை சான்று துறையைச் சேர்ந்த உதவி இயக்குனர் ராகவேந்திர ராவ், திருவள்ளூர் வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் நிர்மலா தேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.விழாவில், உதவி பேராசிரியர் நிர்மலா தேவி பேசும்போது, பாரம்பரிய உணவு பொருள்களான பருத்தி, இளநீர், சிறுதானியங்கள், சீயக்காய் ஆகியவற்றின் பயன்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்தும், விரிவாகப் பேசினார்.மேலும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனைத்துறை, மீன் வளத்துறை, வேளாண்மை விதை ௦ன்று துறை போன்ற துறைகளின் சார்பில், விளக்க கண்காட்சியும் நடைபெற்றது. மேலும், பாரம்பரிய பொருள்கள் பயன்பாடு குறித்தும், விழிப்புணர்வு பேரணியும், கருத்தரங்கமும் நடந்தது.நோயை கட்டுப்படுத்த...விழாவில், கிராமிய கலை நிகழ்ச்சிகள் மூலம் விவசாய தொழில் நுட்பங்கள் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், நவீன வேளாண் இயந்திரங்களை பயன்படுத்த, மானியம் அளிக்கப்படுகிறது. இந்த திட்டத்தில், விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. விதை நேர்த்தி செய்வதன் மூலம், பயிருக்கு பரவும் நோயை கட்டுப்படுத்த, விதை சான்று அலுவலர்கள் விளக்கம் கூறினர்.மேலும், கடம்பத்தூர் ஒன்றியத்தில் நடந்த உழவர் பெருவிழாவில், 53 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த, 14,935 விவசாயிகள் கலந்து கொண்டு, பயன் பெற்றனர்.

## கோடை மழையால் மாவட்ட மக்கள் மகிழ்ச்சி

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று பெய்த திடீர் கோடை மழையால் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 4ம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியது முதல் பல நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் வெளியே செல்ல முடியாமல் தொடர்ந்து அவதியடைந்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று மதியம் 3:30 மணிக்கு கள்ளக்குறிச்சி பகுதியில் பலத்த காற்று வீசியதால், சாலையில் மண் புழுதி கிளம்பியது.

தொடர்ந்து மாலை 4:00 மணியளவில் குளிர்ந்த காற்றுடன் திடீரென மழை பெய்தது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்ததால் சாலைகளில் தண்ணீர் வழிந்தோடியது.

இதேபோல் சின்னசேலம், கச்சிராயபாளையம், சங்கராபுரம் உள்ளிட்ட இடங்களிலும் நேற்று மழை பெய்தது.

இதேபோல் திண்டிவனம், திருக்கோவிலூர் பகுதிகளில் நேற்று மாலை 5:00 மணியளவில்

திடீரென பலத்த காற்றுடன் கூடிய கோடை மழை பெய்தது.
விழுப்புரம், செஞ்சி, கண்டாச்சிபுரம் ஆகிய பகுதிகளிலும் இருள் சூழ்ந்து மேக மூட்டமாக இருந்தது. இத்துடன் குளிர்ந்த காற்று பலமாக வீசத் துவங்கியது.மாவட்டம் முழுவதும் வெயில் தாக்கத்தினால் அவதிக்குள்ளாகி வந்த பொதுமக்கள் மற்றும் விவ சாயிகள், நேற்று பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கோடை மழை கை கொடுக்காததால் முலாம்பழம் மகசூல் கடும் பாதிப்பு

சேலம்: சேலத்தில், மழையே இல்லாததால், முலாம் பழம் மகசூல் கடுமையாக பாதித்துள்ளது. தமிழகத்தில் குறைந்தளவே முலாம்பழம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் அறுவடை செய்யப்படும் முலாம்பழங்கள் தமிழகம், கர்நாடகா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆந்திர மாநிலம், கடப்பாவில் இருந்து தினமு,ம் 100 டன் முலாம்பழங்கம் சேலம் மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது. சேலம் மாவட்டத்தில் செட்டிசாவடி, பனமரத்துபட்டி, மல்லூர், வாழப்பாடி போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் குறைந்த ஏக்கரில் முலாம்பழம் சாகுபடி செய்கின்றனர். சேலம், செட்டிசாவடியில், மூன்றரை ஏக்கரில் முலாம்பழம் பயிரிட்டுள்ள விவசாயி ரத்தினவேல் கூறியதாவது:
முலாம்பழம் சாப்பிடுவது உடல் நலத்துக்கு நல்லது. கோடைக்கு ஏற்ற சிறந்த பானமாகவும் உள்ளது. முலாம்பழங்களை பயன்படுத்துவோர் அதிகரித்து வருகின்றனர். தண்ணீர் இருந்தால் போதும், முலாம்பழத்தை எப்போது வேண்டுமானாலும், சாகுபடி செய்ய முடியும்.
சேலம் மாவட்டத்தில் ஓராண்டாக கடும் வறட்சி நிலவி வருகிறது. 70 நாட்களில் முலாம்பழங்கள் அறுவடை தரக்கூடியது. மூன்று மாதமாக, சேலம் நகரை ஒட்டியுள்ள குரும்பப்பட்டி, செட்டிசாவடி பகுதியில் கோடை மழை பெய்யவில்லை. இதனால், மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மல்சிங் முறையில் முலாம்பழங்கள் நடவு செய்யப்பட்டன. சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்பட்டது. இருந்தாலும், ஒரு முறை கூட மழை பெய்யாததால், முலாம்பழங்களின் கொடியில் உள்ள பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால், காய்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது.
இயற்கையான மழை தண்ணீர் கிடைத்து, சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயம் செய்தால், ஒரு ஏக்கரில், 12 டன் முலாம்பழங்களை அறுவடை செய்ய முடியும். ஆனால், மழை இல்லாததால், ஒரு ஏக்கரில், ஏழு டன் முலாம்பழங்களே உற்பத்தி செய்ய முடிந்தது.
வியாபாரிகள் தோட்டத்துக்கு வந்து, முலாம்பழங்களை, ஒரு கிலோ எட்டு ரூபாய்க்கு வாங்குகின்றனர். கடந்தாண்டு ஒரு கிலோ, 14 ரூபாய்க்கு வாங்கினர். கோடை மழையை நம்பியுள்ளோம். மழை கை கொடுத்தால், மீண்டும் முலாம்பழம் சாகுபடி செய்வோம்; இல்லையேல் வேறு பயிருக்கு மாறி விட வேண்டியதுதான்.
இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியால் மடியும் கொய்யா மரங்கள் பனமரத்துப்பட்டி விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், கடும் வறட்சி நிலவுவதால், கொய்யா மரங்கள் செத்து மடிகின்றன. அதனால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.
பனமரத்துப்பட்டி, மல்லூர் சுற்றுவட்டார பகுதியில், 500க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், கொய்யா மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆண்டுதோறும், இருமுறை, கொய்யா உற்பத்தியாகி, விவசாயிகளுக்கு பலன் கொடுக்கும்.
மல்லூரில், கொய்யா பழத்துக்கு என, தனியாக, தினசரி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இங்கு, நாள்தோறும் அறுவடை செய்யப்படும் கொய்யாவை விற்பனை செய்து, விவசாயிகள் கணிசமான வருவாய் ஈட்டி வந்தனர்.
தற்போது, பனமரத்துப்பட்டி பகுதியில், கடும் வறட்சி நிலவி வருகிறது. அதனால், கொய்யா மரங்கள் செத்து மடிகின்றன. மரத்தில் இருந்த இலை உதிர்ந்து, கிளைகள் காய்ந்து, எலும்புக் கூடுபோல், மரங்கள் காட்சியாளிக்கின்றன. சில இடங்களில், காய்ந்த மரகிளைகள் ஒடிந்து கிடப்பதால், விறகாக பயன்படுத்தப்படுகிறது.
பள்ளித்தெருப்பட்டி, பெரமனூர், பாறையூர், மல்லூர், பி.மேட்டூர், வேங்காம்பட்டி, காளியாகோவில்புதூர், களரம்பட்டி, நல்லியாம்புதூர், கோம்பைக்காடு, நத்தமேடு உள்ளிட்ட கிராமங்களில், கொய்யா மரங்கள் செத்து மடிந்துள்ளன.
பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள் கூறியதாவது:
பத்து ஆண்டுகளுக்கு மேல் பாடுபட்டு வளர்த்த கொய்யா மரங்கள், தண்ணீரின்றி செத்து விட்டது. கிணறு, போர்வெல் ஆகியவை வறண்டு விட்டது. குறைந்த பராமரிப்பு செலவில், ஆண்டுதோறும் இரண்டு முறை கொய்யா மகசூல் கிடைக்கும். கடும் வறட்சியால், கொய்யா மரங்கள் செத்து, எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கொய்யா பயிரிட்ட விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்க, நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இயந்திரங்கள் கர்நாடகா விரைவு கோடை நெல் அறுவடை துவக்கம்

மேட்டூர்: கர்நாடகா காவிரி கரையோர பகுதியில், கோடைநெல் அறுவடை துவங்கியுள்ளதால், தமிழகத்திலிருந்து, நெல் அறுவடை இயந்திரங்கள், கர்நாடகாவுக்கு செல்கிறது.
மேட்டூர் அணையில் திறக்கும் நீரின் மூலம், தமிழக காவிரி டெல்டா மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கடந்த ஆண்டு காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை பொய்த்தது. டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை பொய்த்தது.
நடுவர் மன்ற தீர்ப்புபடி கர்நாடகா அரசு காவிரியில் நீர்திறக்காததால் மேட்டூர் அணை நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால், கடந்த ஆண்டு, தமிழக டெல்டா மாவட்டங்களில் குறுவை,

சம்பா சாகுபடி கடுமையாக பாதித்தது.
கடந்த ஆண்டு கர்நாடகா அணைகளில் போதுமான நீர் இருந்ததால், அங்குள்ள காவிரி கரையோர மாவட்டங்களில் சம்பா, குறுவை சாகுபடி திருப்திகரமாக முடிந்தது. கர்நாடகாவில் குறுவை, சம்பா நெல் அறுவடைக்காக தமிழகத்தில் இருந்து, 500க்கும் மேற்பட்ட அறுவடை இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டது.
பருவமழை பொய்த்ததால் நடப்பாண்டு தமிழக காவிரி கரையோர மாவட்டங்களில் விவசாயிகள் கோடைநெல் சாகுபடி மேற்கொள்ளவில்லை. அதேநேரம் கர்நாடகா ஏரி, குளங்களில் போதிய நீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. கால்வாய் மற்றும் ஆற்றிலும் குறைவான அளவில் நீர் வெளியேற்றப்பட்டது.
இதனால், கர்நாடகாவில் காவிரி கரையோரம், ஏரி, குளம் அருகாமையில் உள்ள நிலங்களில் விவசாயிகள் மூன்று மாதத்துக்கு முன், கோடைநெல் சாகுபடி செய்தனர். தற்போது நெற்பயிர்கள் அறுவடைக்கு தயராகி விட்டதால், கடந்த சில நாட்களாக தமிழகத்தை சேர்ந்த ஏராளமான அறுவடை இயந்திரங்கள் மேட்டூர், கொளத்தூர், மாதேஸ்வரன் மலை வழியாக கர்நாடகாவுக்கு செல்கிறது.

## பால் உற்பத்தியை அதிகரிக்கும் மக்காச்சோள கழிவு விற்பனை

தம்மம்பட்டி: மக்காச்சோள கழிவு, பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதால், தம்மம்பட்டி பகுதியில், கறவைமாடு வளர்ப்பவர்கள், அதை, அதிகளவு வாங்கிச் செல்கின்றனர்.
வறட்சியால், கால்நடைகளுக்கு பசுந்தீவனம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், தவிடு, புண்ணாக்கு, தீவனத்தின் விலையும், கடுமையாக உயர்ந்துள்ளது. இது, கறவைமாடு வளர்ப்பவர்களுக்கு, பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது.
அதனால், பால் உற்பத்தி வெகுவாக குறைந்தது. தீவன பற்றாக்குறையால், சமாளிக்க முடியாத விவசாயிகள், குறைந்த விலைக்கு, கறவை மாடுகளை விற்கும் பரிதாபமான நிலைக்கு ஆளாகினர். இந்நிலையில், குறைந்த விலையில் கிடைக்கும் மக்காச்சோள கழிவை, மாடுகளுக்கு கொடுப்பதால், அதிகளவு பால் கொடுப்பதாக, விவசாயிகள் கூறுகின்றனர்.
இதுகுறித்து, விவசாயி ஒருவர் கூறியதாவது:
கிழங்கு திப்பி (சேகோ கழிவு) கூடை, 100 ரூபாய்க்கும், தவிடு மூட்டை, 400 ரூபாய்க்கும், புண்ணாக்கு மூட்டை, 2,140 ரூபாய்க்கும் விற்கிறது. தீவனங்களின் விலை உயர்வால், மாடு ஒன்றுக்கு, தீவன செலவு, மாதத்துக்கு சராசரியாக, 2,500 ரூபாய் ஆகிறது.
தற்போது கிடைக்கும் பால் விலைக்கு, இது கட்டுபடியாகவில்லை. ஆனால், கிலோ, ஆறு ரூபாய்க்கு கிடைக்கும் மக்காச்சோள திப்பியை, மாடுகளுக்கு கொடுப்பதால், பால் அளவு அதிகரிக்கிறது. ஒரு மாட்டுக்கு, 600 ரூபாய் மட்டுமே, மாதத்துக்கு செலவாகிறது.
இவ்வாறு அவர் கூறினார்.

## மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு

ஆத்தூர்: மஞ்சள் மூட்டை வரத்து குறைவால், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வார நாட்களில், மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, மஞ்சள் மூட்டை வரத்து இல்லாததால், ஏலத்தை, கூட்டுறவு சங்க அலுவலர்கள் ஒத்திவைத்து, வரும், 1ம் தேதி மஞ்சள் ஏலம் நடப்பதாக தெரிவித்தனர்.

## விவசாய பணிகள் ஜரூர்

தர்மபுரி: கோடை மழை தொடர்வதை அடுத்து, ஆரம்ப கட்ட விவசாய பணிகளில், விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் பிரதான தொழில் விவசாயம். மாவட்டத்தில் நெல், கரும்பு, மஞ்சள், மா, மரவள்ளி கிழங்கு, பருத்தி, மற்றும் கேழ்வரகு, சாம்பை உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள், மலர்கள் போன்ற தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் கடந்தாண்டு போதிய தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்தால், மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இறவை சாகுபடி செய்யும் விவசாயிகளும் கிணறுகளில் போதிய தண்ணீர் இல்லாததால், கோடை மழையை எதிர்பார்த்து, தங்களது நிலங்களில் சாகுபடியை துவக்கினார்கள்.

மானவாரி விசாயிகள் கோடை மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் கடந்த சில தினங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக கோடைமழை பெய்து வருகிறது. இதையடுத்து விவசாயிகள் புதிய பயிர்கள் நடவு செய்வதற்கான உழவு பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட துவங்கியுள்ளனர்.

இறவை சாகுபடி செய்த விவசாயிகள் மழையை தொடர்ந்து பயிர்களுக்கு களை எடுத்தல் மற்றும் உரம் ஈடுதல் போன்ற பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தில் பெய்து வரும் கோடை மழையை தொடர்ந்து தர்மபுரி சந்தைபேட்டையில் நேற்று(மே.26)ம் தேதி நடந்த வார சந்தையில், விற்பனைக்கு குவிக்கப்பட்டிருந்த, விவசாய கருவிகளை, விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

**அணை பகுதிகளில் லேசான மழை பருவமழை பொய்த்ததால் பி.ஏ.பி., திட்ட அணைகள் எதுவும் நிரம்பவில்லை.**

நீண்ட நாட்களுக்கு பிறகு அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் லேசான மழை பெய்துள்ளது. ஆழியாறு அணையின் மொத்த உயரமான 120 அடியில் நீர்மட்டம் 58.90 அடியாக உள்ளது. விநாடிக்கு 26 கன அடி தண்ணீர் வரத்தும், அணையில் இருந்து 334 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில், 19.52 அடி உயரத்திற்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 55 கன அடி தண்ணீர் வரத்துள்ளது. அணையில் இருந்து 100 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில், 9.62 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 15 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. 15கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 6.61 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. அணைக்கு நீர் வரத்து இல்லாததால், 15 கன அடி தண்ணீர் மட்டும் வெளியேற்றப்படுகிறது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 26.63 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 71 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. 7 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.சோலையாறில் 3 மி.மீ., மேல்நீராறில் 22, கீழ் நீராறில் 14, வால்பாறையில் 10, மணக்கடவில் 11.2 மி.மீ., மழை பதிவானது

இன்றைய வேளாண் செய்திகள்

27.05.2013 A.M

## காவிரி ஆற்றுபடுகையில் பாசனப் பரப்பளவை அதிகரிக்கிறது கர்நாடகா



பெங்களூர் : காவிரி ஆற்றுப்படுகையில் உள்ள நிலங்கள் உட்பட விவசாய நிலங்களின் பாசன பரப்பளவை அதிகரிக்க கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது. இது பற்றி கர்நாடக பாசன துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் நேற்று அளித்த பேட்டி: நீர்பாசன வசதி பெறும் விவசாய நிலங்களின் பரப்பளவில் கூடுதலாக 9.25 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பை அடுத்த ஐந்தாண்டுகளில் அதிகரிக்க கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.

இந்த திட்டத்திற்கு ரூ.45,574 கோடி செலவாகும். நீர்ப்பாசன திட்டம் குறித்து மேற்கு பகுதியில் இருந்து பாயும் ஆறுகளில் நடத்தப்பட்ட பரமசிவய்யா ஆய்வு அறிக்கையின்படி, கிருஷ்ணா மேலணை திட்டம் , 3, எத்தினஹோளே திட்டம் மற்றும் பத்ரா மேலணை திட்டம் ஆகியவை புதிய தொழில் நுட்பத்துடன் விரைவாக செயல்படுத்தப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி பைப் லைன் அமைத்து தண்ணீர் கொண்டு வருவதற்கு நீர்வளத்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக தனியாக குழு அமைக்கப்பட்டு தேவையான நிலம் கையகப்படுத்தப்படும்.

அலமட்டி அணைக்கட் டின் உயரம் 524.25 மீட்டராக உயர்த்தப்படுவதால், சுற்றியுள்ள 1.55 லட்சம் ஏக்கர் நிலம் அணையுடன் இணைக்கப்படுகிறது. இந்த பகுதியில் வாழும் 1.44 லட்சம் மக்களுக்கு புதிய இடத்தில் வீடு கட்டி கொடுக்கப்படும். காவிரி ஆற்றின் மூலமாக நீர்பாசன வசதி

பெறும் விவசாய நிலங்களின் பரப்பளவை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்பாசன நிலங்களில் சொட்டு நீர்பாசன வசதி மற்றும் தெளிப்பு நீர்பாசன தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பாட்டீல் கூறினார்.

## மழை நீரை அதிக அளவில் சேமிக்க 104 அணைகளை சீரமைக்க முடிவு



கோவை : தமிழகத்தில் 34 ஆறுகள், 17 பெரிய ஆற்று நீர் தேக்கங்கள், 127 துணை நீர் தேக்கங்கள் உள்ளன. ஆண்டுதோறும் மாநில அளவில் 853 டிஎம்சி தண்ணீர் பெறப்படுகிறது. மாநில அளவில் 104 அணைகள் உள்ளன. இந்த அணைகளின் மூலமாக 238.58 டிஎம்சி தண்ணீர் கிடைக்கிறது. அணை நீர் விவசாய நிலங்களுக்கு நேரிடையாகவும், மறைமுகவும் பயன்படுகிறது.

கடந்த ஆண்டில் மழை பொய்த்து போனதால் அணைகளில் 40 சதவீத அளவிற்கு கூட தண்ணீர் கிடைக்கவில்லை. மாநிலத்தில் உள்ள ஆறு, நீரோடைகளை நம்பி 39,202 குளங்கள், ஏரிகள் உள்ளன. இதில் 13,699 பெரிய குளங்கள், ஏரிகளில் கடும் வறட்சி நிலவி வருகிறது. குளம், ஏரி பாசனத்தை நம்பிய பல லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு பயிர் சாகுபடி நடக்கவில்லை.


மழை பொய்த்தால் நிலைமையை சமாளிக்கும் வகையில் நீரை தேக்கி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக அணைகளை தூர் வாரி சீரமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டுக்குள் அனைத்து அணை களும் சீரமைக்கப்படும். முதல் கட்டமாக நடப்பாண்டில் கோவை பொள்ளாச்சி அடுத்துள்ள காடம்பாறை, நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி, முக்கூர்த்தி, போர்த்தி மந்து, கிளன்மார்க்கன், மற்றும் செர்வலார், கொடகனார், சித்தாமல்லி, பொய்கையூர், நம்பியூர், குடமுருட்டியூர், வடக்கப்பாய்ச்சியூர், மணிமுத்தாறு உட்பட 18 அணைகள் சீரமைக்கப்படுகிறது. அணையில் வண்டல் மண் அகற்றப்பட்டு, நீர் தேக்க

பரப்பின் ஆழம், நீளம் அதிகரிக்கப்படும்.

இந்த திட்டத்திற்காக தமிழக அரசு 745.49 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. பொதுப்பணித்துறையினர் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள அணைகளுக்கு 469.94 கோடி ரூபாய், மின் வாரிய கட்டுப்பாட்டில் உள்ள, மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகளுக்கு 260.14 கோடி ரூபாய், வேளாண் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அணைகளுக்கு 15.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் கட்டமாக 42 அணைகள், மூன்றாம் கட்டமாக 28 அணைகள், இறுதி கட்டமாக 16 அணைகள் என மாநில அளவில் 104 அணைகள் சீரமைக்கப்படும். பொதுப்பணித்துறையின் சார்பில் 66 அணைகள் சீரமைக்கப்படவுள்ளது.

கோவை, ஈரோடு மாவட்டத்தில் பில்லூர், அமராவதி, ஆழியாறு, பவானி அணை நீர் தேக்கங்கள் அடுத்த கட்ட சீரமைப்பு திட்டத்தில் மேம்படுத்தப்படவுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்த பொதுப்பணித்துறையினர், ''அனைத்து அணை நீர் தேக்கங்களில் சூரிய சக்தியில் ஆற்றல் திட்டம் மற்றும் தானியங்கி நீர் அளவு பதிவு செய்து கருவி அமைக்கப்படும். நீர் இருப்பு, நீர் வரத்து, அணை நீர் மட்டங்களை எளிதில் தெரிந்து கொள்ள முடியும். அணையின் சுற்றுச்சுவர், ஷட்டர், கரைகள் பலப்படுத்தப்படும். கரைகளின் உயரத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. வரும் காலத்தில் அதிகளவு நீர் தேக்கும் வகையில் அணைகள் சீரமைக்கப்படும்,'' என அதிகாரிகள் கூறினர்.

## மேட்டூரில் அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைப்பு



மேட்டூர் : காவிரி நீர் பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் கடும் வறட்சி காணப்படுகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. பறந்து விரிந்துள்ள

மேட்டூர் அணையில் குட்டை போல ஆங்காங்கே தண்ணீர் தேங்கி உள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 49 கன அடி நீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில், குடிநீர் தேவைக்காக கடந்த சில நாட்களாக வினாடிக்கு 800 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்தது. நீர் திறப்பு நேற்று காலை முதல் 600 கன அடியாக குறைக்கப்பட்டது. வரத்தைவிட திறப்பு அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 19.71 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 19.54 அடியாக குறைந்தது. நீர் இருப்பு 3.96 டிஎம்சி.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 காசு உயர்வு**



நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், முட்டை விலையில் மேலும் 5 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 302 காசாக உள்ள ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 307 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.58 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.70 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

27.05.2013 A.M

---

## ரிஷிவந்தியம் பகுதியில் கடும் வறட்சியால் கரும்பு பயிர்கள் கருகியது நிவாரணம் வழங்க விவசாயிகள் எதிர்பார்ப்பு

ரிஷிவந்தியம்,

ரிஷிவந்தியம் பகுதியில் கடும் வறட்சியின் காரணமாக கரும்பு உட்பட விவசாய விளை பொருட்கள் தண்ணீர் இன்றி கருகியது. பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

சுட்டெரிக்கும் வெயில்

விழுப்புரம் மாவட்டத்தில் சங்கராபுரம் வட்டத்தை சேர்ந்த விவசாயிகள் அதிகளவு கரும்பு பயிர் சாகுபடி செய்து வருகிறார்கள், இதனால் இப்பகுதியை சுற்றி 4 கரும்பு ஆலைகள் அமைக்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்த போதிலும் கோடை மழையை நம்பி ரிஷிவந்தியம் பகுதி விவசாயிகள் தங்களது நிலத்தில் கரும்பு சாகுபடி செய்திருந்தனர்.

இந்த நிலையில் கோடை மழையும் கைவிரித்த நிலையில் தற்போது கடும் வறட்சி நிலவியுள்ளது. தினமும் 100 டிகிரி செல்சியசிற்கும் மேல் வெயில் சுட்டெரிப்பதாலும் ஏரி, குளங்களில் தண்ணீரின்றி வறண்டது. மேலும் நிலத்தடி நீர்மட்டமும் படிப்படியாக குறைந்துள்ளது. மின்வெட்டு பிரச்சினையும் இன்னும் முடிவுக்கு வராத நிலையில் நிலத்தடியில் இருந்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் கடும் அவதியடைந்து வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் டிராக்டர், டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீரை பாய்ச்சி வருகின்றனர்.

கரும்பு பயிர்கள் கருகியது

மேலும் கத்திரி வெயிலின் தாக்கத்தால் கடும் அனல் காற்று வீசுவதால் கரும்பு உள்ளிட்ட விவசாய பயிர்கள் கருகுகின்றன. இதனால் தங்களது கரும்பை காப்பாற்ற முடியாமல் பல விவசாயிகள்

செலவு செய்த பணம் வீணாகிவிடுமோ என்ற பயத்தில் 5 மாதம் ஆன கரும்பைகூட தனியார் புரோக்கர் மூலம் தற்போது வெட்டிவருகின்றனர், 100க்கணக்கான ஏக்கர் இளம் கரும்புகள் தண்ணீர் இல் லாமல் காய்து வருகின்றன, இதனால் இந்த வருடம் கரும்பு விவசாயிகளுக்கு பொருளா தார இழப்பு ஏற்பட்டுள்ளதால் கரும்பு விவசாயிகள் தங்கள் கரும்புகளுக்கு அரசு உரிய இழப்பீடு தர மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க கோரிவருகின்றனர்,

<u>வெப்பநிலை உயர்வு</u>

மேலும் 5 ஆயிரம் ஹெக்டர் அளவிலிருந்த காடுகள் அழிக்கப்பட்டு தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் மூலம் யூக்கலிப்டஸ் மரங்கள் வளர்த்து வருவதால் இப் பகுதியின் வெப்பநிலை எப்பொழுதும் இல்லாத அளவிற்க்கு உயர்ந்துவிட்டது, வன உயிரினங்கள் மேய்ச்ச லுக்கு போதுமான உணவு காட்டுபகுதியில் கிடைக் காததால் விவசாயிகளின் விளைபொருட்களை நாடி வருவதாலும் விவசாயம் பாதிப்படைந்துள்ளது, இதற்கு வனத்துறை வனப்பகுதியில் 30 சதவீத வனப்பகுதியில் வன உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவாக நிரந்தர காடுகள் அமைத்து தந்தால் வன உயிரினங்கள் காக்கப் படுவதுடன், இப்பகுதியின் வெப்பநிலை சமன்பட ஏதுவாக இருக்கும்.

## செம்பனார்கோவில் பகுதியில் தர்பூசணி விற்பனை மும்முரம்

**ஆக்கூர்,**

செம்பனார்கோவில் பகுதியில் தர்பூசணி விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

<u>நீர்ச்சத்து நிறைந்து தர்பூசணி</u>

கோடைக்காலத்தில் பொதுமக்கள் உடலில் உள்ள வெப்பத்தை தணிக்க அதிகமாக குளிர்பானங்களை பயன்படுத்துகின்றனர். அதேபோல வெள்ளரி, தர்பூசணி, இளநீர் ஆகியவற்றையும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். தர்பூசணி பழத்தில் அதிக அளவு நீர்ச்சத்து மற்றும் இரும்புசத்து உள்ளது. இதனால் அனைத்து தரப்பு மக்களும் தர்பூசணியை விரும்பி உண்கின்றனர். இந்த பழத்தில் மருத்துவ குணங்கள் நிறைய உள்ளன.

தர்பூசணி பழம் புதுக்கோட்டை, திருப்பூர், காங்கேயம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பயிரிடப் பட்டு மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கோடைக்காலமான மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் இந்த தர்பூசணி பழம் விற்பனைக்கு வருகிறது.

<u>விற்பனை மும்முரம்</u>

ஒரு கிலோ தர்பூசணி பழம் ரூ.6 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்படுகிறது. செம்பனார் கோவில், ஆக்கூர் ஆகிய பகுதிகளில்  வியாபாரிகள் தள்ளுவண்டி மற்றும் சாலையோரங்களில் தற்காலிக கடைகள் அமைத்து தர்பூசணி பழத்தை விற்பனை செய்து வருகின்றனர்.  தற்போது மேற்கண்ட பகுதிகளில் தர்பூசணி பழ விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

## பாரம்பரிய நெல்ரகங்கள் வெள்ளம், வறட்சி அனைத்தையும் தாங்கி வளர்கிறது இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு

திருத்துறைப்பூண்டி,

பாரம்பரிய நெல்ரகங்கள் வெள்ளம், வறட்சி அனைத்தையும் தாங்கி வளர்கிறது என்று இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.

<u>நெல் திருவிழா</u>

திருத்துறைப்பூண்டியை அடுத்துள்ள ஆதிரெங்கத்தில் உள்ள இயற்கை வேளாண்மை பண்ணையில் மாநில அளவி லான 2 நாள் நெல் திருவிழா மற்றும் கருத்தரங்கம், கலைநி கழ்ச்சி, கண்காட்சி தொடங் கியது. ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சடை யாண்டி கண்காட்சியை தொடங்கி வைத்தார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர், நமது நெல்லை காப்போம் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் உஷாகுமாரி ஆகியோர் முன் னிலை வகித்தனர். விழாவிற்கு தலைமை தாங்கி இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதா வது:–

10 லட்சம் ஏக்கர் நெல் கருகி விட்டது. ஆனால், பாரம்பரிய நெல் பயிரிட்ட நிலங்களில் நல்ல மகசூல் எடுக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் பாரம்பரிய நெல் ரகங்களின் மகத்துவம் வெளியாகியுள்ளது. பாரம்பரிய நெல் ரகங்கள் அனைத்தும் வெள்ளம், வறட்சி அனைத்தையும் தாங்கி வளர்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>அறிவியல்–தொழில்நுட்பம்</u>

தமிழ்நாடு வேளாண்மை பல் கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், நாடு சுதந்திரம் அடைந்த போது இருந்த மக்கள்தொகை 33 கோடி. இன்று அது 138 கோடி யாக உள்ளது. ஆனால் சாகு படி நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இந்தியாவில் 58கோடி இளைஞர்கள் 25 வயதிற்கு உட்பட்டவர்கள். அவர்க ளுக்கு நமது பாரம்பரியத்தை எடுத்துக்கூறி இயற்கை வேளாண்மை முறையை கற்றுத் தந்தால் நம்நாட்டை சேர்ந்த வர்கள்தான் உலகிலேயே

வேளாண்மையில் முன்னோடி யாக இருப்பார்கள். அறிவிய லும், தொழில்நுட்பமும் இணைந்த செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்று எடுத் துக்கூறினார். விழாவில் தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, ஆந்திரா, ஒடிசா, மேற்குவங்காளம் போன்ற வெளி மாநிலங்களை சேர்ந்த இயற்கை வேளாண்மை விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர்.

## இயற்கை உணவு வகைகள் நுகர்வு அதிகரித்து வருகிறது அசோசெம் தகவல்

புதுடெல்லி

உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு, செலவிடும் வருவாய் மற்றும் வாழ்க்கை தரம் உயர்ந்து வருவது போன்ற காரணங்களால் இயற்கை முறை சாகுபடி மூலம் விளைந்த உணவு பொருள்களின் நுகர்வு அதிகரித்து வருவதாக அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

நம் நாட்டில் தற்போது உயர் வருவாய் பிரிவினரில் 62 சதவீதத்தினர் இந்த வகை உணவு பொருள்களையே பயன்படுத்துவதாக இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. இந்த பிரிவினர் குறிப்பாக இயற்கை உரத்தால் விளைந்த காய்கறி, பழங்களை அதிகம் விரும்புவதாக தெரிய வந்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், பெருநகரங்களில் இயற்கை முறை உணவு வகைகளை நாடும் உயர் வருவாய் பிரிவினரின் எண்ணிக்கை 95 சதவீதம் உயர்ந்துள்ளதாக அசோசெம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரசாயன உரம் மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்தி விளைவிக்கப்பட்ட உணவு பொருள்களை விற்பனை செய்யும் 1,500 சில்லறை விற்பனையாளர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களில் 1,000 பேர் உடல் ஆரோக்கியம் மற்றும் மண்வள பாதுகாப்பை கருத்தில் கொண்டு நுகர்வோர் இயற்கை உணவு பொருள்களை வாங்க தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இயற்கை உர விளைபொருள்கள் பயன்பாட்டில் 65 சதவீத பங்குடன் மும்பை முதலிடத்தில் உள்ளது. அடுத்து டெல்லி (61 சதவீதம்), பெங்களூர் (58 சதவீதம்), அகமதாபாத் (55 சதவீதம்), ஐதராபாத் (52 சதவீதம்) சண்டிகார் (51 சதவீதம்) மற்றும் இந்தூர் (50 சதவீதம்) ஆகிய நகரங்கள் உள்ளன.